## உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2015

---

உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 1986 இன் உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் கட்டளை இலக்கம் 06 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 நிதியத்தின் செயற்படுநிலை

1985 இன் 10 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரமும் ஆரம்ப உறுப்புரையின் 16(அ)(2)(1) இல் உள்ளடக்கப்பட்ட பிரிவின் பிரகாரமும் மேற்கூறப்பட்ட நிதியத்தின் கட்டுப்பாடு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் வசம் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரச்சட்டம் திருத்தப்படாமல் 2010 திசெம்பர் 13 ஆந் திகதிய 12/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் மூலம் மாதாந்த சம்பளப் பட்டியல் தயாரித்தல் மற்றும் கோவையின் பொறுப்பளி தன்மை என்பன 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் பிரதேச செயலாளருக்கு பன்முகப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.5 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு முரணாக காசு அடிப்படையில் மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்திற்குக் கிடைக்கின்ற சகல பெறுவனவுகளும், கொடுப்பனவுகளும் நிதியத்தின் வருமானச் செலவினக் கூற்றின் மூலம் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இந்த நிதியத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் பொதுக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 92,167,536 தொகை மற்றும் ஆண்டின் ஓய்வூதியச் செலவினம் ரூபா 92,167,536 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் நிதியத்தினால் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முதலீடுகள் தேறியிருந்தமையால் அதன் அடிப்படையில் பெறப்பட்ட வட்டி ரூபா 241,614,357 தொகை ஓய்வூதியக் கொடுப்பனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவு குறிப்புக்களின் மூலமேனும் காட்டப்படாமையினால் நிதியத்தின் நலன்களைச் செலுத்துதல் கணக்குகளில் சரியாக பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 4,850 ஆகவும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5,181 ஆகவும் இருந்தமை ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனித் தரவு முறைமையின் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும்,

நிதியத்திற்குரிய ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கையை இனங்கண்டு அதற்கு வருடாந்தம் சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர்கள் அல்லது இறப்புக்களைச் சீராக்கி நிதியத்தின் ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் நிதியத்தினால் பேணப்படாமையின் காரணமாக, 331 ஓய்வூதியக்காரர்களின் அதிகரிப்பை உறுதிப்படுத்துவதற்கான எச்சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 4.1(அ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்கான விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 209,924,558 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 92,076,168 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 117,848,390 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் அடிப்படையில் இந்த நிதி விளைவுகள் மாற்றம் அடையலாம்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

1985 இன் 10 ஆம் இலக்க உள்ளுராட்சி சேவைகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 16(அ) பிரிவின் பிரகாரம் உள்ளுராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் அங்கத்தவர்களின் தபுதாரர்களுக்கும், அநாதைகளுக்கும் ஓய்வூதியம் செலுத்தும் நோக்கில் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் நிதியத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| | ---------------------------------------------- | -------------------------------- |
| (அ) | கணக்கீடு | நிதியத்தின் செயற்பாட்டுத் தன்மையை பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான கட்டுப்பாடு | பிரதேச மட்டத்தில் தகவல்களைக் கோரி நிதியத்தின் அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ஓய்வூதியச் செலவினம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |